ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1939/16 - 2015 නොවැම්බර් මස 04 වැනි බදාදා - 2015.11.04
*1939/16 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*27 அ ஆம் பிரிவில் உப பிரிவு (4) இன் கீழான கட்டளை*

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தில் பிரிவு 27அ (4) ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், காணி அமைச்சர் முணசிங்க காரியவசம் அப்புஹாமிலாகே தொன் சோமதாஸ குணவர்தன ஆகிய நான், இக்கட்டளை மூலம்,*

*(அ) 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ள, இக்கட்டளையில் முதலாம் அட்டவணையில் விபரமாக காட்டப்படுகின்றதும், நாலந்த வத்தை என்று அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும் காணியுடன் தொடர்புடைய 1982 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 181/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 27அ (1) ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட கட்டளையில் இங்கு இரண்டாவது அட்டவணையில் குறித்துரைத்து காட்டப்பட்டுள்ள நாலந்த வத்தை என்ற காணியின் நிலப்பகுதிக்கு ஏற்புடையதாகும் பகுதி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிப்பதற்கு கவனத்திற் கொள்வதற்கான கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக செயற்படாமை என்ற அடிப்படையில், இரத்துச் செய்வதன் மூலம் அந்தக் கட்டளையை திருத்தம் செய்கின்றேன் ; மற்றும்*

*(ஆ) இந்த இரத்துச் செய்தலுக்கமைவாக இக்கட்டளையில் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைத்து காட்டப்பட்டுள்ள காணி அளவினை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையளிக்கப்படுவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
*காணி அமைச்சர்.*

*காணி அமைச்சு,*
*காணி பொதுச் செயலகம்,*
*மிஹிகத்த மெதுர,*
*இல. 1200/6, ரஜமல்வத்தை, வீதி,*
*பத்தரமுல்லை,*
*2015, ஒற்றோபர் 05.*

**முதலாவது அட்டவணை**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ள நாலந்த வத்தை என்ற காணியின் விபரம்

| அதி விசேட வர்த்தமானியின் இலக்கமும் திகதியும் | தோட்டக் காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ள காணியின் அளவு (ஹெக்டெயார்) |
|---|---|---|---|---|
| 1982.02.27 ஆந் திகதிய 181/12 ஆம் இலக்கம் | நாலந்த வத்தை | மாத்தளை | நாஉல | 457.09 |

**இரண்டாவது அட்டவணை**

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் மீண்டும் கையேற்கப்படும் காணிப் பகுதியின் விபரம்

| விசேட இலக்கம் | காணியின் பெயர் | நிர்வாக மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் காணிகளின் அளவு |
|---|---|---|---|---|---|
| மஹ/390<br>கொ/3039<br>கொ/1521 | நாலந்த வத்தை | மாத்தளை | மாத்தளை | மடவல உல்பத E 322 C | மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் வகபனஹ உடசிய பற்று - நாலந்தா கிராமத்தில் அமைந்துள்ள<br>வடக்கு - நாலந்தா வத்தையில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிற்குரிய காணி ;<br>கிழக்கு - நாலந்தா வத்தையில் காணி ச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணி மற்றும் துண்டு இலக்கம் 2;<br>தெற்கு - பிரதான வழியும்;<br>மேற்கு - 1 நாலந்தா வத்தையில் காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவிற்குரிய காணி, பிரதான வழியில் அமைந்துள்ள நாலந்தா வத்தையில் ஒரு பகுதிக்காக.<br>அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. கே. ஓ. பெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் 3655 மற்றும் 2008.04.03 ஆந் திகதிய அளவைப்படத்தில் துண்டு 01 பகுதியில் காட்டப்பட்டுள்ள 01ஏக்கர் 2 றூட் 04 பேர்ச்சஸ் ( 0.6196 ஹெக்டெயார்) கொண்ட நில அளவாகும். |

11- 474

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.